தேதி - 17.04.2026.

**Pro.OP**.146/2023

**Rw**.2- திருமதி.கிரிஜா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரருக்கும் நான் அத்தை. உயில் எழுதப்பட்டதாக கூறப்படும் தேதி பற்றி எனக்கு தெரியாது. என் தம்பி 2017 ஏப்ரலில் இறந்துவிட்டார். என் தம்பி K.V.மகேஸ்வரன் இறப்பதற்கு 10 வருடத்திற்கு முன்பு அவருடன் பேச்சு வார்த்தை இல்லை. அவருக்கு முடியவில்லை என்று சொன்ன பிறகு நாங்களே அவருடன் பேசினோம். ஆடிட்டர்கள் அமர்நாத் மற்றும் பிரேம்நாத் -ஐ தெரியும். என் அப்பாவும், அவர்களுடைய அப்பா கிருஷ்ணமாச்சாரியும் நண்பர்கள். அதனால் என் அப்பா காலத்திலிருந்தே அவர்களை தெரியும். அமர்நாத் மற்றும் பிரேம்நாத் உயிலை எழுதியுள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர்களுடைய தந்தை இறந்த பிறகு மனுதாரர்கள் குடும்பத்திற்கும், என் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. இருவரும் அவரவர் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோம் என சாட்சி கூறுகிறார். மேற்படி ஆடிட்டர்கள் உயிலை தயாரித்தார்கள் என்றும் அதுபற்றி எனக்கு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது

என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- கிரிஜா

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2026.04.17 18:37:58 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.